# தேசிய சுற்றுச் சூழல் மாத விழா

புதுச்சேரி, மார்ச் 4-

அரியாங்குப்பம் அரசு உயர்நிலைப்பள்ளியில் புதுச்சேரி அறிவியல்தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் துறை, பள்ளி கல்வித் துறை சுற்றுச் சூழல் பிரிவு சார்பில் தேசிய சுற்றுச்சூழல் மாத விழா மூன்று நாட்கள் நடந்தது.

பள்ளி தலைமை ஆசிரியர் சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார். முதன்மை கல்வி அலுவலர் கலைச்செல்வன், மாநில பயிற்சி மைய சிறப்பு பள்ளி அலுவலர் கிருஷ்ணன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தனர். இரண்டாம் நாளில் சுற்றுச்சூழல் பற்றி பேச்சுபோட்டி, கட்டுரைப் போட்டி, முழக்கங்கள் எழுதும் போட்டிகள், மூலிகை ஊர்வலம் நடத்தப்பட்டது.

மூன்றாம் நாளில் நடந்த மூலிகை கண்காட்சியினை தேசிய நல்லாசிரியர் ராமநாதன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். தோனாங்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் குப்புசாமி வாழ்த்தி பேசினார்.



அரியாங்குப்பம் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடந்த தேசிய சுற்றுச்சூழல் மாத விழாவினை முதன்மை கல்வி அலுவலர் கலைச்செல்வன் துவக்கி வைத்து பேசினார். அருகில் சிறப்பு பணி அலுவலர் கிருஷ்ணன், தலைமை ஆசிரியர் சுந்தரமூர்த்தி,பசுமைபடை பொறுப்பாசிரியர் துரைராமலிங்கம்.

நிறைவு விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு சபாநாயகர் சபாபதி பரிசு வழங்கி பாராட்டினார். ஈஷா பசுமை கரங்கள் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. முன்னாள் கவுன்சிலர் பாவாடை, ஆசிரியைகள் தமிழரசி, புஷ்பகாந்தி, கமலாதேவி, பாஸ்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர். பசுமைப்படை பொறுப்பாசிரியர் துரை ராமலிங்கம் நன்றி கூறினார்.